DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. NO: 08/2024** Date: 03.02.2025

**Prosecution Witness**

Deposition of witness for : **PW: 9**

Name : S ஜெயகுமார்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Age :

Calling :

Religion :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03.02.2025.

முதல் விசாரணை :–

நான் கொல்லிமலையில் குடியிருந்து டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2022–ம் தேதி இரவு சுமார் 10.15 மணியளவில் லாரியில் பெங்களுரிலிருந்து நான் லோடு ஏற்றிக்கொண்டு பெருந்துரைக்கு செல்வதற்காக தருமபுரி இரயில்வே மேம்பாலத்தின் மீது ஏறுவதற்காக சென்றபோது எனது லாரிக்கு பின்னால் திடீரென சத்தம் கேட்டது. நான் சற்றுதுாரம் சென்று வாகன்த்தை நிறுத்திவிட்டு திரும்பிவந்து பார்த்தபோது

கார் எனது லாரியின் பின்னார் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. காரில் சுமார் 06 நபர்கள் இருந்தார்கள். 06 நபர்களுக்கும் பலமாக அடிபட்டு சுயநினைவின்றிருந்தார்கள். எனவே ஆம்புலன்ஸ் மூலம் அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். பின்னர் போலிசார் என்னை காவல் நிலையம் அழைத்துசென்று விசாரித்தனர். மறுநாள் விபத்தில் 03 நபர்கள் இறந்ததாக தெரிந்துக்கொண்டேன்.

**<u>குறுக்குவிசாரணை</u>** – எதிரிதரப்பில்

எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த விபரம் எனக்கு தெரியாது. நான் சேலம் நோக்கி சாலையின் இடதுபுறமாக சென்றேன். நான் சாலையின் வலது பக்கமாக சென்று திடீரென இடதுபுறமாக எந்த சைகையும் செய்யாமல் லாரியை திருப்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. வலதுபுறம் எனக்கு முன்பாக சென்ற வாகனத்தை முந்திசெல்வதற்காக நான் இடதுபுறமாக லாரியை திருப்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிதான் காரினை ஓட்டிவந்தார். எனது கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் என்னை தனிப்பட் முறையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

C.C.No.165/2024
நாள்: 03.02.2025
அ.சா.2 – புவனேஷ்வரி (வேளாண்மை உதவி இயக்குநர், காரிமங்கலம்) ஆஜர். (சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு முதன்மை சாட்சியத்தின் தொடர்ச்சியாக விசாரணை செய்யப்படுகிறார்.)

**2**. மாவட்ட இணைஇயக்குநர் அவர்கள் மாவட்ட அளவில் வாட்ஸ்அப் குருப்பில் User ID, Password ஆகியவற்றை பகிர்ந்து இருந்தார். வட்டார அலுவலகத்தில் உள்ள நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களை திருத்தங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். 01.04.2020–ம் தேதி பார்மர்ஸ் கார்னர் என்ற போர்டல் ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் விவசாயிகள் தன்னிச்சையாக பதிவுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். 23.03.2020 முதல் 14.04.2020 தேதி வரையிலும், 15.04.2020 முதல் 31.04.2020–ம் தேதி வரையிலும் இரண்டு முறை லாக்டவுன் அறிவிக்கப்பட்டது. பென்னாகரம் பகுதியில் 17.07.2020 முதல் 03.08.2020–ம் தேதி வரை தனியாக லாக்டவுன் அறிவிக்கப்பட்டது. மேற்படி காலகட்டத்தில் விவசாயிகள் அதிக அளவில் பி.எம்.கிசான் திட்டத்தில் பதிவுகள் மேற்கொள்ளபட்டது.

3. லாக்டவுன் என்பதால் களப்பபணியாளர்கள் நேரடியாகவோ அல்லது விவசாயிகளிடமிருந்து ஆவணங்களை பெற்று நிரந்தர மற்றும் தற்காலிக பாணியாளர்கள் மூலம் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க கூறப்பட்டிருந்தது. ஆவணங்களை பரிசிலித்ததில் அதிகபடியான தகுதியற்ற பயணயாளிகள் பதிவேற்றம் செய்யபட்டிருந்தது தெரியவந்தது. பென்னாகரம் வட்டத்தில் அதிக அளவில் பதிவேற்றம் செய்யபட்டிருந்ததும் தெரியவந்தது. எனவே

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தருமபுரி மாவட்ட சிபிசிஐடி அலுவலகத்தில் தெரிவித்திருந்தார். பொதுசேவை மையத்தில் தவறான பதிவேற்றம் செய்திருக்கலாம் என்று தெரிவித்து இருந்தோம். சுமார் 10 நபர்கள் மீது சந்தேம் உள்ளதாக தெரிவித்தியிருந்தோம். சிபிசிஐடி போலிசார் பென்னாகரம் வட்டத்தில் மீனா என்ற தற்காலிக பணியளார் தவறாக பதிவேற்றம் செய்துள்ளதாக கண்டுபிடித்தனர். திருத்தங்கள் மேற்கொள்ளும்போது தகுதியற்ற பயணாளர்களை சேர்த்துள்ளதும், மீனாவின் பெயரிலேயே 03 கணக்குகளை தொகை பெற்றுயிருப்பதும் தெரியவந்தது.

4. எனவே போலிசார் மீனாவை கைதுசெய்து அவரிடமிருந்து கம்யூட்டர் மற்றும் சிபியும் பறிமுதல் செய்தனர். அப்போது நானும் என்னுடன் முருகேசன் உதவி மேலாளர் ஆகியவர் முன்னிலையில் கைப்பற்றினார்கள். தகுதியற்ற நபர்கள் தொகை பெற்றுள்ளதை திரும்ப பெற்றபோது அவர்கள் வித்யா என்பவர் அவர்களிடமிருந்து தொகை பெற்றதாக தெரிவித்தனர். இரண்டு போன் எண்களிலிருந்து 110 பயணாளர்கள் பெயர்பதிவுகள் செய்யபட்டுள்ளதாக தெரியவந்தது. என்னிடம் காட்டப்படும் 110 பயணளார்கள் விவரபட்டியல்தான் நான் தெரிவித்த பதிவுகள் விவரம் ஆகும். (**07.10.2020–ம் தேதியிட்ட 110 பயணளார்கள் விவர பட்டியல் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**). வித்யா என்பவர் ஓசூர் வட்டாரத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்காலிக பணியாளராக பணிபுரிந்துவந்தார். மேலும் பென்னாகரம் வட்டாரத்தில் 8728 தகுதியற்ற பயணாளர்கள் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்தது. என்னிடம் காட்டப்படும் 8728 பயணாளர்கள் விவரபட்டியல்தான் நான் தெரிவித்த பதிவுகள் விவரம் ஆகும்.

(**8728 பயணாளர்கள் விவர பட்டியல் அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** இது குறித்து சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்குவிசாரணை</u>** – (எதிரிகள்தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை).

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. NO: 165/2024** Date: 03.02.2025

**Prosecution Witness**

Deposition of witness for : **PW: 3**

Name : **தமிழ்செல்வி**

Father's Name :

Village :

Taluk :

Caste :

Age :

Calling :

Religion :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03.02.2025.

முதல் விசாரணை :–

நான் தற்போது பென்னாகரம் வட்டாரம், பெரும்பாலை பிர்காவில் உதவி வேளாண்மை அலுவலராக பணிபுரிந்துவருகிறேன். பிம்.கிசான் திட்டம் 2018–ம் வருடம் வருவாய் துறையினர் மூலம் மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வந்தது. வருவாய் துறையில் அதிக பணிசுமை இருந்ததால் மேற்படி திட்டம் வேளாண்மை துறையினரால் செயல்படுத்த மாற்றிகொடுக்கப்பட்டது. மேற்படி திட்டத்தில் வங்கி எண் திருத்தம், ஆதார் எண் திருத்தம், வங்கி ஐஎப்.எஸ்.சி

திருத்தம் ஆகியவை தற்காலிக மற்றும் நிரந்தர பயணாளர்கள் மூலம் வேளாண்மை துறையினரால் மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலருக்கும் 09 பஞ்சாய்த்துகள் ஒதுக்கப்பட்டது. திட்டத்தின் பயணாளர்களை அலுவலத்திற்கு வரச்சொல்லி திருத்தங்களை மேற்கொள்வோம். எனக்கு கணிணி வேலை தெரியாததால் அவலுவலத்திற்கு பயணளார்களை வரச்சொல்லி தற்காலிக மற்றும் நிரந்தர பணியளார்கள் மூலம் நான் மேற்கண்ட பணிகளை செய்துவந்தேன்.

2. கொரோனோ நோய்தொற்று காலம் என்பதால் பயணாளர்களை வாட்ஸ்அப் மூலம் ஆவணங்களை அனுப்ப சொல்லி அதனை சரிபார்த்து திருத்தங்களை மேற்கொள்வோம். பென்னாகரம் பகுதியில் லாக்டவுன் என்பதால் பாப்பாரப்பட்டியில் பணிபுரிந்த மீனா என்பவருக்கு வாட்ஸ்அப் மூலம் ஆவணங்கள் அனுப்பப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. பின்னிட்டு மீனாவின் வங்கி கணக்கில் எனது பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கான தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பது தெரியவந்தது. இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்குவிசாரணை</u>** – (எதிரிகள்தரப்பில்)

1. ID, Password பொதுவாக எங்கள் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். அலுவலகத்தில் உள்ள கம்யூட்டரில் நாங்கள் சரிபார்க்கும் பணிமட்டும் செய்துவந்தோம் என்றால் சரிதான். சின்னபள்ளியை சேர்ந்த கடவுள் ஸ்டுயோ உரிமையாளர் கணேசன் என்பவர் மூலம் நான் கணிணியில் சரிபார்க்கும் வேலையை செய்துவந்தேன் என்றால் சரியல்ல.

சின்னம்பள்ளி, பாப்பாரப்பட்டியில் இருந்து சுமார் 50 கி,மீ. தள்ளி உள்ளதுஎன்றால் சரிதான். எனது பகுதியில் சரிபார்க்கும் பணியை நான்தான் செய்யவேண்டும் என்றால் சரிதான். பாப்பாரப்பட்டி சுமார் 50 கி.மீ. தள்ளி உள்ள நிலையில் நான் கணேசன் என்பவரைவைத்து சரிபார்க்கும் பணியை செய்துவந்தேன் என்றால் சரியல்ல. நான் எனது பணியை சரியாக செய்யாமல் அதிலிருந்து தப்பிபதற்காக மீனா மீது வீண்பழி சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது சரிபார்க்கும் பணிக்கும், மீனாவிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல, மீனா சின்னம்பள்ளிக்கு இரண்டு நாட்கள்வந்து பணிசெய்வார். மீனா என்பவர் எங்களது அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்றாலும், மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தனியார் ஒப்பந்ததாரர் என்றால் சரியல்ல. நாங்கள் செய்த தவறிலிருந்து தப்பிபதற்காக மீனா மீது பழிசுமத்துகிறேன் என்றால் சரியல்ல.

2. திட்டத்தின் கீழ் முதலில் பதிவேற்றம் செய்து, பின்னர் திருத்தம் செய்து, பின்னர் அனுமதி வழங்கபடும் என்றால் சரிதான். எனது பணி சரிபார்க்கும் பணியுடன் முடியும் என்றால் சரிதான். ஒப்புதல் வழங்கும் நபரிடம்தான் OTP எண் வழங்கப்படும் என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது. நாங்கள் திட்டத்தின் கீழ் ஒப்புதல் எதுவும் வழங்குதல் இல்லை.

கம்யூட்டர் லாக் செய்யும்போது அதன் OTP எண் குருப்பில் சேர்செய்யப்படும். குருப்பில் சுமார் 20 நபர்கள் இருப்பார்கள். OTP எண்ணை வைத்து எங்கள் அலுவலகத்தில் உள்ள கணிணியில் மட்டும்தான் திருத்தம் செய்யமுடியும். குருப்பில் உள்ள 20 நபர்கள் OTP எண்ணை வைத்து வேறுநபர்கள் மூலம் பணிகளை மேற்கொள்ளமுடியும் என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது.

**மறுவிசாரணை** – இல்லை

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. NO: 79/2023** Date: 03.02.2025

**Prosecution Witness**

Deposition of witness for : **PW: 1**

Name : K. **சக்திவேல்**

Father's Name :

Village :

Taluk :

Caste :

Age :

Calling :

Religion :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03.02.2025.

**முதல் விசாரணை :–**

நான் உங்காரனஅள்ளியில் குடியிருந்து தனியார் மில்லில் பணி செய்துவருகிறேன். கடந்த 28.06.2022–ம் தேதி காலை 07.00 மணியளவில் இவ்வழக்கு தகராறு நடந்துள்ளது. தகராறு நடந்தபோது நான் அங்கில்லை. நான் வேலைமுடித்து காலை 07.30 மணிக்கு வீட்டிற்கு வந்தேன் எதிரி பிரபு வீட்டின் முன்பாக சண்டை போட்டுக்கொண்டிருந்தார், பின்னர் அவர்சென்றுவிட்டார். அதனை தொடர்ந்து காலை 08.30 மணியளவில் எதிரி

ஆறுமுகம் அடியாட்களை அழைத்துவந்தார். நான் அப்போது பால்ஊற்ற சென்றுவிட்டேன். எதிரி ஆறுமுகம் எனது தம்பி குமாரின் தலையில் செம்பு கம்பியால் அடித்துள்ளார். சதிஷ்குமார் மற்றும் ரவிகுமார் கல்லால் எனது தம்பியின் வயிற்றில் அடித்துள்ளார்கள். பெருமா, மாதம்மாள், லட்சுமி ஆகியோர் எனது மகள் காவியவை அடித்துள்ளார்கள். மேற்படி விவரத்தை எனது மகள் காவியா எனக்கு போன்செய்து சொன்னார். எனவே நான் 09.00 மணிக்கு வீட்டிற்கு சென்றபோது வரும்வழியில் எதிரிகள் அனைவரும் என்னை வழிமறைத்து எதிரி ஆறுமுகம் கட்டையால் எனது இரண்டு கால்களிலும் அடித்தார். சதிஷ்குமார் மற்றும ரவிகுமார் கட்டையால் எனது காலில் அடித்தார்கள். மாதம்மாள் மண்கட்டையால் எனது இடதுகையில் அடித்தார். பெருமா எனது கண்ணத்தில் கையால் அடித்தார். லட்சுமி, ராஜேந்திரன் ஆகியோர் கையால் எனது முதுகில் அடித்தார். நான் அங்கிருந்து எனது பெரியப்பா வீட்டு வழியாக ஓடினேன். எனது பெரியப்பா மாது மற்றும் கோகிலா ஆகியோரையும் எதிரிகள் அடித்துள்ளார்கள். பின்னர் ரமேஷ் என்பவர் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்று சேர்த்தார். அங்குவந்த போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**குறுக்குவிசாரணை**</u> – (எதிரிகள்தரப்பில்)

1. போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து பெற்றார்கள், எனது தம்பி போலிசாரிடம் கூறியுள்ளார். போலிசாரிடம் நான் புகார் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பால்ஊற்றுவதற்காக காலை 09.00 மணிக்கு சென்றேன். எனது தம்பி மற்றும் காவியாவை எதிரிகள் அடித்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் 09.15 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். என்னை எதிரிகள் அடித்ததற்கு முன்னரும், பின்னரும் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் மருத்துவமனையில் என்னை விசாரித்து கையெழுத்து பெற்றதற்கு பின்னிட்டு விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

2. நான் 10–ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் மருத்துவனையில் சேர்ந்தபோது, எதிரிகளும் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டிருந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளை நாங்கள் தாக்கியதாக ஒருவழக்கு உள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் என்னை 08 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளேன். மருத்துவரிடம் நான் மண்கட்டை மற்றும் மரக்கட்டையால் என்னை அடித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். உங்காரனஅள்ளியில் இருந்து எனது வீடு சுமார் அரைகிலோமீட்டர் தள்ளியுள்ளது. உங்காரனஅள்ளி ஊரில் சம்பவம் நடந்ததாக மருத்துவரிடம் கூறியுள்ளேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் வீட்டின் அருகில் சம்பவம் நடந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவிந்தசாமி, காளிய்பபன், முனியப்பன் ஆகியோர் அண்ணன் தம்பி என்றால் சரிதான். எனது தந்தை காளியப்பன்

என்றால சரிததன். எதிரிகள் கோவிந்தசாமியின் வாரிசுகள்  என்றால் சரிதான். எங்களுக்குள் வழிபிரச்சனை எனது தந்தை காலம்முதல் உள்ளது.

3. நாங்கள் தான் எதிரிகளை வரப்புகளை ஒட்டி தகராறு செய்து எதிரிகளை தாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் இருந்து தப்பிபதற்காக நாங்கள் தன்னிச்சையாக காயம் ஏற்படுத்தி பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் நான்  கூறியவாறு இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. NO: 79/2023** Date: 03.02.2025

**Prosecution Witness**

Deposition of witness for : **PW: 2**

Name : **கோகிலா**

Father's Name :

Village :

Taluk :

Caste :

Age :

Calling :

Religion :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03.02.2025.

முதல் விசாரணை :–

நான் தற்போது உங்காரனஅள்ளியில் குடியிருந்து கூலிவேலை செய்துவருகிறேன். அ.சா.1 எனது சின்னமாமனார் மகன் ஆவார். 28.06.2022–ம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு அருகே உள்ள வழிதடத்தை 1–வது எதிரி பிரபு டிராக்டர் வைத்து ஓட்டினார். நான் டிராக்டர் ஓட்டியவருக்கு போன்செய்து வழிதடத்தை ஓட்ட வேண்டாம் என கூறினேன். அதற்கு எதிரி பிரபு என்னை பார்த்து கண்டரோலி,

தேடிவடியா எதற்கு நிறுத்தினாய் என்று என்னை திட்டினார். அத்துடன் பொதுகிணற்று பைப்பையும் எதிரி பிரபு பிடுங்கிபோட்டார். முனிரத்தினமும் நீ யார் தடுப்பதற்கு தேவடியா என்று திட்டினார். பின்னர் காலை 09.00 மணிக்கு எதிரி ஆறுமுகம், சதிஷகுமார், ரவிகுமார், மாதம்மாள், லட்சுமி, ராஜேந்திரன் ஆகியோர் குமாரை எங்களது நிலத்தில் வைத்து அடித்துக்கொண்டிருந்தார்கள். நான் சத்தம்கேட்டு வெளியேவந்து பார்த்தேன். பின்னர் ஆறுமுகம் அனைவரையும் எனது வீட்டிற்கு அழைத்துவந்து என்னை மற்றும் எனது கணவர் சங்கர், மாது, செல்வி ஆகியோரை அடித்தார்கள். ஆறுமுகம் கோலால் என்னையும், மாதுவையும் அடித்தார். சதிஷ்குமார் மற்றும் ரவிகுமார் கல்லால் எனது கணவரை அடித்தார்கள். மாதம்மாள் எனது அக்கா செல்வியை கை மற்றும் செருப்பால் அடித்தார். லட்சுமி என்னை கல்லால் முதுகில் அடித்தார். அடித்துவிட்டு எதிரிகள் கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். பின்னர் எதிரிகள் திரும்பிவந்து காலை 09.30 மணிக்கு அ.சா.1 சக்திவேலை சிவலிங்கம் என்பவரின் நிலத்தில் வைத்து அடித்தார்கள். சக்திவேல் எங்கள் வீட்டு வழியாக ஓடினார். பின்னர் போலிசார் அங்குவந்து விசாரித்தனர். அதன்பின்னிட்டு நாங்கள் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அதன்பின்னிட்டு போலிசார் என்னை வழக்கு குறித்து விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை** – (எதிரிகள்தரப்பில்)

1. தகராறு காலை 09.00 மணிக்கு நடந்தது. போலிசார் பகல் 11.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு வந்தார்கள். எந்த போலிசார் வந்தார்கள் என்று தெரியாது. போலிசார் தகராறு குறித்து விசாரித்தனர், மருத்துவமனைக்கு

செல்லுமாறு கூறினார்கள். மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். எனக்கும், எனது கணவருக்கும் சம்பவத்தின்போது இரத்த காயம் எதுவும் ஏற்படவில்லை. போலிசார் காவல்நிலையத்தில் வைத்து சம்பவம்குறித்து 10 நாட்கள் கழித்து விசாரித்தனர். அதற்கு பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவரிடம் 05 நபர்கள் அடித்தார்கள் என்று கூறியுள்ளேன். நான் கல்லால் அடித்ததாக மருத்துவரிடம் கூறினேன்.

2. உங்காரனஅள்ளி ஊரில் நாங்கள் வசித்துவரவில்லை. நான் மருத்துவரிடம் எனது வீட்டிற்கு முன்பாகதான் சம்பவம் நடந்ததாக கூறியுள்ளேன். மதியம் 01.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம். அ.சா.1 எனது கணவரின் சித்தப்பா மகன் ஆவார். முனியப்பன், காளியப்பன் குடும்பத்தார் சேர்ந்து கோவிந்தசாமி குடும்பத்தாரிடம் தகராறு செய்துவருகிறோம் என்றால் சரியல்ல. எங்கள் இருகுடும்பத்திற்கும் ஆள் மற்றும் பணபலம் உள்ளது என்றால் சரியல்ல. வழிபிரச்சனை எங்களுக்குள் இருந்து வருகிறது என்றால் சரிதான். வழிபிரச்சனை காரணமாக நாங்கள் எதிரிகளை தாக்கிவிட்டு அந்த வழக்கிலிருந்து தப்பிதற்காக பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் குமார் மற்றும் சக்தி ஆகியோரை எதிரிகள் அடித்ததை பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்து கையெழுத்து எதுவும் வாங்கவில்லை.

3. நாங்கள் மருத்துவமனையில் இருந்தபோது எதிரிகளும் மருத்துவமனையில் இருந்தார்கள் என்றால் சரிதான். எங்கள் மீது எதிரிகள் கொடுத்த புகார் மீது வழக்கு பதிவுசெய்யபட்டு நிலுவையிலுள்ளது என்றால்

சரிதான். எங்களை எதிரிகள் அடிக்கவில்லை என்றாலும், நாங்கள்தான் எதிரிகளை தாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. நிலபிரச்சனைக்காக பொய்யான வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. NO: 79/2023** Date: 03.02.2025

**Prosecution Witness**

Deposition of witness for : **PW: 3**

Name : **சங்கர்**

Father's Name :

Village :

Taluk :

Caste :

Age :

Calling :

Religion :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03.02.2025.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது உங்காரனஅள்ளியில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். அ.சா.1 சக்திவேல் எனது சித்தப்பா மகன், அ.சா.2 கோகிலா எனது மனைவி ஆவார். 28.06.2022–ம் தேதி காலை 08.00 மணியளவில் எனது மனைவி டிராக்டர் ஓட்டியவரிடம் வழியை ஓட்டகூடாது என போனில் சொன்னார். பின்னர் சத்தம் கேட்டு வெளியே வந்துபார்த்தபோது குமாரை ஆறுமுகம், சதிஷ்குமார், ரவிகுமார் ஆகியோர் காப்பால் தலையிலும்,

கல்லால் வயிற்றிலும் அடித்தார்கள். நாங்கள் வீட்டிற்கு முன்பாக இருந்து அடிப்பதை பார்த்துக்கொண்டிருந்தோம். தேவடியா, கண்டரோலி உன்னால்தான் பிரச்சனை என்று எனது மனைவியை பார்த்து கூறி எங்களை அடிக்க எதிரிகள் வந்தார்கள். ரவிகுமார் எனது சட்டையை பிடித்து என்னை கீழே தள்ளி கல்லால் இடது கழுத்து பகுதியில் அடித்தார். கோகிலா, லட்சுமி ஆகியோர் கல்லால் என்னை முதுகில் அடித்தார்கள். ஆறுமுகம், சதிஷகுமார், ரவிகுமார் ஆகியோர் கோலால் மாதுவின் முதுகில் அடித்தார்கள். செல்வியை லட்சுமி என்பவர் செருப்பால் நெஞ்சின்மீது அடித்தார். அப்போது அங்குவந்த அ.சா.1 சக்தியை கோலால் ஆறுமுகம், சதிஷகுமார், ரவிகுமார் ஆகியோர் அடித்தார்கள். பெருமாள், மாதம்மாள், லட்சுமி, ராஜேந்திரன் ஆகியோரும் கையால் சக்திவேலை அடித்தார்கள். பின்னர் நாங்கள் மருத்துவனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**குறுக்குவிசாரணை**</u> – (எதிரிகள்தரப்பில்)

1. சண்டை முடிந்து மருத்துவமனைக்கு பகல் 01.30 மணிக்கு சென்றோம். சண்டையை யாரும் தடுக்கவில்லை என்றால் சரிதான். பக்கத்தது வீட்டுகாரர்கள் சண்டையை பார்த்தார்கள். ருக்கு என்பவர் சண்டையை பார்த்தார், வேறுயாரும் வரவில்லை. பைக்கில் நானும், எனது மனைவியும் மருத்துவமனைக்கு சென்றோம், நான்தான் பைக்கை ஓட்டினேன். இரத்த காயம் எதுவும் சம்பவத்தின்போது எனக்கு ஏற்படவில்லை. சண்டைக்கு மறுநாள் போலிசார் என்னை விசாரித்தனர், நேரம் நியாபகம் இல்லை. பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சண்டை நடந்தன்று போலிசார் வீட்டு அருகே வைத்து விசாரித்தனர், விசாரித்தபோலிசார் யார் என்று தெரியாது.

2. நாங்கள் இருகுடும்பபத்தார் சேர்ந்து எதிரிகளை தாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு ஆள்பலம் மற்றும் பணபலம் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் மீது எதிரிகள் கொடுத்த புகார் மீது வழக்கு பதிவுசெய்யபட்டு நிலுவையிலுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் மருத்துவமனையில் இருந்தபோது எதிரிகளும் மருத்துவமனையில் இருந்தார்கள் என்றால் சரிதான். எங்களை எதிரிகள் அடிக்கவில்லை என்றாலும், நாங்கள்தான் எதிரிகளை தாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. நிலபிரச்சனைக்காக பொய்யான வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரபு, ஆறுமுகம், மாதம்மாள், பெருமா ஆகியோரைதவிர மற்றவர்கள் வெளிஊரை சேர்ந்தவர்கள். வழிபிரச்சனை காரணமாக பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. NO:197 /2021** Date: 03.02.2025

**Prosecution Witness**

Deposition of witness for : **PW: 1**

Name : **ஜெயலதா**

Father's Name :

Village :

Taluk :

Caste :

Age :

Calling :

Religion :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03.02.2025.

**முதல் விசாரணை :-**

**நான் தற்போது பிடமனேரிரோடு, அப்பாவுநகரில் குடியிருந்துவருகிறேன். 17.03.2014-ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு நான் எனது அண்ணன் வீட்டிற்கு சென்றுவிட்டு பின்னர் திரும்பி இரவு 09.00 மணியளவில் எனது வீட்டிற்கு சுந்தரமூர்த்தி மருத்துவர் வீட்டிற்கு அருகே வந்தபோது எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்தவர் எனது கழுத்தில் கத்தி வைத்ததுபோல் இருந்தது. நான் திரும்பி பார்த்தபோது எனது கழுத்திலிருந்த**

தாலிகொடியை பறித்து அவர் கையில் வைத்திருந்தார். பின்னர் இருசக்கர வாகனத்தில் எனது தாலியுடன் சென்றுவிட்டார். தாலி சுமார் 09 பவுன் இருக்கும். நானும், அருகில் இருந்தவர்களும் சத்தம்போட்டு பிடிக்க முயற்சி செய்தோம், ஆனால் முடியவில்லை. பின்னர் மறுநாள் காலை சுமார் 11.00 மணிக்கு தருமபுரி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**). பின்னர் இரண்ட மாதங்கள் கழித்து எனது நகை கிடைத்துவிட்டதாக கூறினார்கள். நான் காவல்நிலையம் சென்று எனது நகையை அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள நகைதான் என்னிடமிருந்து பறிக்கப்பட்ட நகையாகும். (**வழக்கு சொத்தான நகையுள்ள புகைபடம் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**). என்னிடமிருந்து நகை பறித்த நபரை எனக்கு அடையாளம் தெரியாது. வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்குவிசாரணை</u> – (எதிரிகள்தரப்பில்)**

நகை பறித்த நபர் வந்த இருசக்கர வாகனத்தின் தயாரிப்பு நிறுவனம் எனக்கு தெரியாது. தாலி பறித்தபோது ஒருபக்கம் துண்டிக்கப்பட்டது. சம்பவம் நடந்தயிடம் பொதுமக்கள் அதிக நடமாட்டம் உள்ளயிடம் என்பதால் நகை பறிக்க முடியாது என்றால் சரியல்ல. எதிரிகள் என்னிடமிருந்து எந்த நகையும் பறிக்கவில்லை என்றால் சரியல்ல. நகை பறித்தபோது ஒருவர் மட்டும்தான் இருசக்கர வாகனத்தில் வந்திருந்தார். அவருடன் வேறுயாரும் இல்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. NO:197 /2021** Date: 03.02.2025

**Prosecution Witness**

Deposition of witness for : **PW: 2**

Name : **மணி**

Father's Name :

Village :

Taluk :

Caste :

Age :

Calling :

Religion :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 03.02.2025.

முதல் விசாரணை :–

**நான் பிடமனேரியில் குடியிருந்து காய்கறி கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். 18.03.2014–ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு எனது கடைஅருகே வந்த போலிசார் அருகில் இருந்த வீட்டில் நகை திருடுபோனது குறித்து விசாரித்து வரைபடம் வரைந்தனர். அப்போது சாட்சியாக இருக்க கேட்டுகொண்டதின்பேரில் நானும், கனகராஜ் என்பவரும்**

கையெழுத்து செய்தோம். கனகராஜ் இறந்துவிட்டார். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** இதுகுறித்து போலிாசர் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்குவிசாரணை</u>** – (எதிரிகள்தரப்பில்)

போலிசார் என்னை கடையில் வைத்து விசாரித்தனர். பார்வை மகஜரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் கையெழுத்து செய்ததாளில் எழுதியிருந்தது. நான் கையெழுத்து செய்த தாளில் படம் வரையப்பட்டிருந்ததா என்று எனக்கு நியாபகமில்லை. நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு போலிசார் சொல்லிகொடுத்ததுபோல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் சம்பவிடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.